**01.02.2024 MCOP.No.12/2022**

**ம.சா. 1 பெயர்:** தமிழ்செல்வன்

**சாட்சி ஆஜர். பிரமாணம் செய்யயப்பட்டார் 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அனுகீதா வாட்டர்வாஸ் நிறுவனம் எனக்கு சொந்தமானது ஆகும். மேற்படி நிறுவனம் தற்போது இயங்கி வருகிறது என்றால் பராமரிக்க முடியவில்லை என்பதால் இயங்கவில்லை. விபத்து நடந்த இடம் வளைவான பகுதி என்றால் சரிதான். விபத்து நடந்த ரோடு குறுகளானது என்றால் சரிதான். மேற்படி சாலையில் ஒரு வாகனம் மட்டுமே செல்ல இயலும் என்றாலும் எதிரில் வாகனம் வந்தால் ஒட்டியுள்ள மண் தரையில் இறங்கி செல்லவேண்டும் என்றாலும் சரிதான். சம்பவ இடத்தில் புதர் ஏதேனும் இருந்ததா என்றால் இல்லை. சம்பவ இடம் வளைவாக இருந்த போதிலும் எதிரில் வருகிற வாகனத்தை பார்த்தால் காண இயலும் என்றால் சரிதான். வளைவில் பொதுவாக வாகனங்கள் மொதுவாக தான் செல்லும் என்றால் சரியல்ல. வளைவான பகுதி நான் வேகமாக தான் வாகனத்தை இயங்கி வந்தேன் என்றால் இல்லை, மினி பேருந்து வேகமாக வந்தது. நான் கூறுவது போல் மினி பேருந்து வேகமாக வரவில்லை என்றாலும் நான் வாகனத்தை வேகமாக ஓட்டி சென்று விபத்துக்கு காரணமாக இருந்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்தன்று தலை கவசம் அணியவில்லை என்றால் அணிந்திருந்தேன். எனக்கு எங்கு எங்கு காயம் ஏற்பட்டது என்றால் வலது தொடை முறிந்து வெளியில் வந்து விட்டது, வலது கையில் காயம் ஏற்பட்டு இருந்து, இடது புருவதிற்கு மேல் நெத்தியில் காயம் ஏற்பட்டது மற்றும் வயிற்று பகுதி மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டது. என் மனைவி என்னுடன் வந்து இருந்தார் என்றால் ஆமாம். என் மனைவி தலை கவசம் அணிந்து இருந்தாரா என்றால் ஆமாம். தலை கவசம் அணிந்து இருந்தால் தலையில் காயம் ஏற்பட்டு இருக்காது என்றால் தலை கவசம் அணியவில்லை என்பதால் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல, தலை கவசம் கண்ணாடி உடைந்து கிழித்து விட்டது. தலை கவசம் உடைந்து காயம் ஏற்பட்டது என்று மருத்துவமனையிலும், போலிஸ் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசிதிகளில் 47-வது ரசீதியில் கண்ட தொகை ரூ.15,075.00 ரசீதி எண்.29-ல் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. TN-29-M-7777 எனக்கு சொந்தமானது ஆகும். மேற்படி வாகனத்தின் பதிவு சான்று தாக்கல் செய்து உள்ளேன். நான் கூறுவது போல் வாகனத்தின் பதிவு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பயணம் தொடர்பான ரசீதுகள் வாகனத்திற்கு எரி பொருள் நிரப்பி உள்ளது தவிர நான் பயணம் செய்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, முறையே அந்த அந்த தேதிகளில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் உள்ளது. மருத்துவமனைக்கு செல்லும் வழியில் 5 சுங்கசாவடி உள்ளது. சுங்க கட்டணத்திற்கான ரசீதி ஒப்படைத்துள்ளேன். நான் கூறுவது போல் ரசிதி தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் தார் ரோட்டில் நடந்ததா, மண் ரோட்டில் நடந்ததா என்றால் நான் மண் ரோட்டில் செல்லும் போது எதிர்திசையில் வந்த வாகனம் மோதி விட்டது. எதிரில் ஓட்டி வந்த பேருந்தினை மெதுவாகவும் ஆரன் அடித்து இயங்கி வந்தார்கள் என்றாலும் நானாக வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டேன் என்றாலும் சரியல்ல. வாட்டர் வாஸ் நிறுவனத்தை முறையே பதிவு செய்து வைத்து உள்ளேனா என்றால் இல்லை. வருமான வரி செலுத்துவது இல்லை. நான் மாதம் ரூ.50,000/- வருவாய் ஈட்டுவதாக பொய்யாக கூறி இருந்தேன் என்றாலும் சரியல்ல. நிறுவனம் நடத்துவதற்கு கணக்கு பதிவு உள்ளதா என்றால் இல்லை. வழக்கில் கோரி உள்ள தொகை

அதிகமானது என்றாலும் தற்போது நல்ல நிலையில் உள்ளேன் என்றாலும் சரியல்ல. மினி பேருந்திற்கு சம்பவத்தன்று தகுதி சான்று இல்லை என்றாலும் ஆகவே 2-ம் எதிர்மனுதாரர் எவ்விதமான இழப்பீட்டு தொகை செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றாலும் சரியல்ல.

**<u>1 -ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்த பகுதி வளைவான பகுதி. வளைவான பகுதிக்கு முன்னும் பின்னும் வேக தடை உள்ளது என்றால் தெரியாது. வளைவில் வாகனங்கள் பொறுமையாக தான் வரும் என்றால் எதிரில் வந்த வாகனம் வேகமாக வந்தது. 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தை மெதுவாக தான் ஓட்டி வந்தார் என்றாலும் நான் வாகனத்தை வேகமாக ஓட்டி சென்று விபத்து ஏற்படுத்தி கொண்டேன் என்றாலும் சரியல்ல.

Subordinate Judge

SENTHIL KUMAR RAJAVEL

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai